
பக்கங்கள் 13+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 21 சனிக்கிழமை 05.07.2024 | அதிர்வு 336

## நீரில் மூழ்கி மூதாட்டி பலி

குளத்தில் நீராடிக் கொண்டிருந்த மூதாட்டி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். 02▶



‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### செம்மணி மனிதப் புதைகுழியின்

# புதிய பகுதியில் மண்டையோடு

### இன்றைய அகழ்வுப் பணியின் போது அடையாளம்



(பிரபாகரன் டிலக்சன்)

மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட யாழ். செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மேலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பகுதியில் இருந்து இன்று மண்டையோடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்து. 02▶

# சர்வதேச தலையீடு தேவையில்லையாம்

### வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றார்



இலங்கைக்குச் சர்வதேச தலையீடு அவசியம் இல்லை எனவும், இலங்கையின் அரசமைப்பு, சட்டம் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பு ஊடாகவே நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் செப்டெம்பரில் நடைபெறவுள்ளது. எனவே, மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்தது நல்லது. அவருக்கும் அறிக்கை முன்வைப்பதற்கு அது இலகுவானதாக இருக்கும். ஏனெனில் அவரால் விடயங்களை நேரில் அவதானிக்க முடிந்தது. நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டியுள்ளோம்.

பொருளாதாரப் பாகுபாட்டை நிவர்த்தி செய்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றையும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு காண முடிந்தது. நாம் எதையும் ஒளிக்கவில்லை. வெளிப்படைத்தன்மையுடன்தான் நடவடிக்கை இடம்பெறும்.

செப்டெம்பர் முதல் வாரமளவில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது பற்றிய வர்த்தமானியை வெளியிடுவதே அரசின் இலக்காக உள்ளது.” – என்றார்.




# மக்களை அடக்கி ஆள முற்படும் அரசுக்கு எதிராக அணிதிரள்வோம்

## இப்படி நாமல் எம்.பி. அறைகூவல்

மக்களை அடக்கி ஆள முற்படும் அரசுக்கு எதிராக நாம் அணிதிரள்வோம் எனறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களளிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"மக்களின் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைத்து அடக்கு முறை ஊடாக ஆட்சியை முன்னெடுப்பதற்கு அரசு முற்படுகின்றது.

ஆரம்பத்தில் ராஜபக்ஷக்களைக் கள்வர்கள் என்றார்கள், அதன்பின்னர் 225 பெரும் கள்வர்கள் என்றார்கள், தற்போது ஒட்டுமொத்த அரச ஊழியர்களையும் கள்வர்கள் என்கிறார்கள்.

வைத்தியர்களுக்கும் இன்று அதே பட்டம் சூடப்பட்டுள்ளது. அடுத்து சட்டத்தரணிகள் இலக்கு வைக்கப்படுவார்கள். இறுதியில் வாக்களித்தே மக்களை அடக்கி ஆள முற்படுவார்கள்.

நாட்டில் பல பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன. எனினும், அரச அதிகாரிகள்மீது பழிபோட்டுவிட்டு தமது இயலாமையை மூடிமறைப்பதற்கு அரசு முற்படுகின்றது. மக்களை அடக்கி ஆள முற்படும் அரசுக்கு எதிராக நாம் அணிதிரள்வோம்.

நாட்டில் தேசிய பாதுகாப்பை அரசு வீழ்த்தியுள்ளது. இதைப் பற்றி கதைப்பது இனவாத்தைத் தூண்டும் செயல் என்ற விம்பமும் உருவாக்கப்பட்டுள்ளது.

# வாகன விபத்தில் பெண் ஒருவர் மரணம்!

வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் பதுளை - மஹியங்கனை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

புன்சிரிகம, படல்கும்புர பகுதியை சேர்ந்த 61 வயதுடைய பெண்ணே இதன்போது உயிரிழந்துள்ளார்.

மஹியங்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரிதிஹொட்டாவில உணவகத்திற்கு முன்பாக பிபிலவில் இருந்து மஹியங்கனை நோக்கிச் சென்று கொண்டிருந்த கப் வாகனம் ஒன்று வீதியில் பயணித்த பெண் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பெண் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் மஹியங்கனை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹியங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நீரில் மூழ்கி...

இந்தச் சம்பவம் அநுராதபுரம், கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலிப்பொத்தான குளத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் இரத்மல்கஹவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 76 வயதுடைய மூதாட்டி ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

### புதிய பகுதியில்...

அந்தப் பகுதிகளில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த 2 ஆம் திகதி ஆரம்பமாகின.

இந்நிலையில் நேற்றைய அகழ்வின்போது அந்தப் பகுதியில் சிறுமியின் ஆடை ஒன்று முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டிருந்தது. இன்றைய அகழ்வில் மண்டையோடு ஒன்று அடையாளம் காணப்பட்டது. அதனை அகழ்ந்து எடுப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# களுத்துறையில் கால்வாயில் இருந்து மனித எலும்புக்கூடு ஒன்று இன்று மீட்பு!



தேயிலைத் தோட்டம் ஒன்றில் உள்ள கால்வாயில் இருந்து மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது களுத்துறையில் மத்துகம பொலிஸ்

பிரிவுக்குட்பட்ட எடகெஹெல்கல்ல வீதியில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டம் ஒன்றில் உள்ள கால்வாயில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று மத்துகம பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த ஒருவரின் எலும்புக்கூடாக இது இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது ஆணா அல்லது பெண்ணா என இதுவரை கண்டறியப்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்துகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியா சேக்கிழார் மன்றத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

**(கி.வசந்தன்)**

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இன்று இடம்பெற்றது.

வவுனியா, பூங்கா வீதியில் அமைந்துள்ள இந்துமா மன்ற அலுவலகத்தில் வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி திருமாலினி முன்னிலையில் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

18ஆவது ஆண்டை நோக்கிச் செல்லும் வவுனியா சேக்கிழார் மன்றத்தின் நிர்வாகத் தெரிவு மன்றத்தின் தலைவர் க.ஐயம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

அந்தவகையில் சேக்கிழார் மன்றத்தின் புதிய தலைவராக முன்னாள் அதிபரும் வவுனியா மத்தியஸ்த சபையின் முன்னாள் தவிசாளருமான சி.வரதராசா தெரிவு செய்யப்பட்டதுடன், செயலாளராக ஆசிரியரும் வவுனியா விசேட காணி மத்தியஸ்த சபை உறுப்பினரும் ஊடகவியலாளருமான கி.வசந்தரூபனும், உப தலைவராக மத்தியஸ்த சபை உறுப்பினரும் ஊடகவியலாளருமான திருமதி சி.திவியாவும், உப செயலாளர்களாக ஓய்வுநிலை விரிவுரையாளர் செ.சத்தியநாதன் மற்றும் பா.சுந்தரராஜனும், பொருளாளராக முன்னாள் மத்தியஸ்த சபை உறுப்பினரும் ஓய்வு நிலை உத்தியோகத்தருமான தா.சலசலோசனும், கணக்காய்வாளராகநா.தியாகராஜாவும், நிர்வாகக் குழு உறுப்பினர்களாக கேசலா, குலேந்திரன், கு.கோகுலன், சுஜித்தா, நாகராஜா, மோகனதாஸ், சி.கஜேந்திரகுமார், துரைராஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டதுடன், போசகர்களாக க.ஐயம்பிள்ளை, தணிகாசலம், நா.வில்வராஜா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.



# ஐ.எம்.எவ்வின் நிபந்தனைகளை நிறைவேற்றி வருகின்றார் அநுர

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



“சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை மறுசீரமைக்கப்படும் என உறுதியளித்திருந்த ஜனாதிபதி அநுரகுமார, அந்த உறுதிமொழியை நிறைவேற்றாது ஐ.எம்.எவ்வின் நிபந்தனைகளை நிறைவேற்றி வருகின்றார்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சர்வதேச நாணய நிதியத்துடன் ரணில் அரசு செய்துகொண்ட ஒப்பந்தம் நாட்டுக்கு ஏற்புடையது அல்ல எனவும், தாம் ஆட்சிக்கு வந்த பிறகு புதிய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் எனவும் அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார்.

எனினும், தற்போது ஒப்பந்தத்தை மாற்ற முடியாது , அவ்வாறு செய்தால் அது பிரச்சினைக்கு வழிவகுக்கும் எனவும், நடைமுறையில் இருந்த ஒப்பந்தமே முன்னெடுத்து செல்லப்படும் எனவும் ஜனாதிபதி கூறி வருகின்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படாததால் 4ஆம் கட்ட கடன் தவணை இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஆனால், தற்போது அது விடுவிக்கப்பட்டுள்ளது. திடீரென இது எப்படி சாத்தியமானது? எரிபொருள் விலையேற்றம், மின் கட்டணம் அதிகரிப்பு போன்ற சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால்தான் கடன் கிடைக்கப்பெற்றுள்ளது.” – என்றார் .



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருத்துவ நெருக்கடி

அரச வைத்தியசாலையில் பணிபுரியும் புகழ்பெற்ற வைத்திய நிபுணர் ஒருவர் சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள், கருவிகள், மருந்துகள் போன்ற சில பொருள்கள் வைத்திய சாலையில் பற்றாக்குறையாக இருக்கின்றமையால் குறிப்பிட்ட ஒரு வெளித் தரப்பிடம் வாங்கி வருமாறு கட்டாயபடுத்துவதன் மூலம் பெருந் தொகை பணத்தை நோயாளர்களைச் செலவிட வைத்து, ஊழல், மோசடி, முறைகேடுகளைப் புரிந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு இருக்கின்றார்.

இந்த விவகாரம் மருத்துவத் துறையில் பெரும் சர்ச்சையை உருவாக்கி இருக்கின்றது.

அரசு வைத்தியசாலைகளில் உரிய மருந்துகள், கருவிகள், உபகரணங்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற காரணத்தினால் அத்தகைய பொருள்களை வெளிப்புற மூலங்களில் இருந்து பெற்று வருமாறு நோயாளர்களை வழிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் மருத்துவ ஊழியர்களும் அதிகாரிகளும் இருக்கின்றார்கள். இது விடயத்தில் உத்தியோகபூர்வ வழிகாட்டுதல், ஒழுங்கு முறைகள் இல்லாத காரணத்தினால் மருத்துவ அதிகாரிகளும், ஊழியர்களும் பொது விமர்சனத்திற்கும், தொழில் முறை ஆபத்துகளுக்கும், நெருக்கடிகளுக்கும் உள்ளாக வேண்டிய இக்கட்டு ஏற்பட்டிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் சங்கம் கடிதம் மூலம் சுகாதார அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்குச் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

அரச மருத்துவமனை மற்றும் மருந்தகங்களில் கிடைக்காத மருத்துவப் பொருள்களை வெளியில் வாங்கி வருவதற்கான மருந்துச் சீட்டுகளை அரச வைத்தியசாலை வைத்தியர்கள் நோயாளிகளுக்கு வழங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனரா, குறிப்பாக குறைந்த எண்ணிக்கையிலான விற்பனையாளர்கள் மூலம் மட்டுமே கிடைக்கின்ற இத்தகைய பொருள்கள் தொடர்பில் - விசேடமாக இருதயவியல், எலும்பியல் அல்லது காய அறுவை சிகிச்சை போன்ற நேர நெருக்கடியும் உணர்வுபூர்வமான சிக்கலும் கொண்ட விடயங்களில் - தேவைப்படும் போது குறிப்பிட்ட விநியோகத்தர்களிடம் நோயாளிகளை வழிநடத்த அனுமதிக்கப்படுகின்றதா என்பது குறித்து தெளிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட வேண்டும் என்று மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுகாதார அமைச்சரைக் கோரியிருக்கின்றது.

இதற்கு இடையில் -

கொழும்பு தேசிய மருத்துவமனையில் 'பைபாஸ்' அறுவை சிகிச்சைகள் போன்ற உயிர்காக்கும் நடைமுறைகளை நாடும் நோயாளிகள், முக்கியமான மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சைப் பொருள்களுக்கான கடுமையான பற்றாக்குறை காரணமாக அறுவை சிகிச்சைச்சைக்குத் தேவையான இந்தப் பொருள்களை வெளியில் இருந்து கொண்டு வர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும், இவற்றுக்கு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான செலவு ஆகும் என்றும் மருத்துவமனையின் உயர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய இந்த நெருக்கடி ஆயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

"தேசிய மருத்துவமனையில் நுண்ணுயிர் எதிர்ப்பிகள், இதய மருந்துகள், மயக்க மருந்துகள், சிறப்பு வலி நிவாரணிகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்குத் தேவையான பல அத்தியாவசியப் பொருள்களின் கடுமையான பற்றாக்குறை உள்ளது," என்று அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

தவிரவும் தேசிய மருத்துவமனையின் நான்கு எம்.ஆர்.ஐ. ஸ்கானிங் இயந்திரங்களில் மூன்று தற்போது செயல்படவில்லை. தேசிய மருத்துவமனைக்கு நிரந்தர இயக்குநர் இல்லாததால் நிலைமை மேலும் மோசமடைந்து, நிர்வாக தாமதங்கள் மற்றும் திறமையின்மைக்கு வழிவகுக்கிறது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த மருத்துவ நெருக்கடியைத் தாண்டுவது அரசுக்குப் பெரும் சிக்கலானதாகவே இருக்கும். எப்படி இந்தச் சிக்கலை அரசு கடந்து, நேர் சீரான - குழப்பமில்லாத - உயிர்காக்கும் மருத்துவசேவையை நாட்டு மக்களுக்கு அது உறுதிப்படுத்தப் போகின்றது?



# கல்விக்கு வறுமை ஒரு தடையில்லை; வறுமையால் கல்வியை இழக்காதீர்!

## கணபதிபுரத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார்

(வி.ரி.சகாதேவராஜா)

வறுமையைக் காரணங்காட்டி கல்வியை இழந்துவிடக் கூடாது. உண்மையில் வறுமை கல்விக்கு தடையில்லை என்பது இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. வாழ்த்துக்கள்.

இவ்வாறு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் தெரிவித்தார்.

சம்மாந்துறை வலயத்தில் மிகவும் பின்தங்கிய மல்வத்தை கணபதிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலத்தில் நேற்று (01) செவ்வாய்க்கிழமை அதிபர் எஸ். கிருபைராஜா தலைமையில் புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா நடைபெற்றது.

விசேட அம்சமாக பலவசதியீனங்களுக்கு மத்தியிலும் இந்த முறை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய சாந்தகுமார் டர்வின் என்ற மாணவன் பாராட்டப்பட்டு சைக்கிள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மல்லிகைத்தீவு அ.த.க.பா. அதிபர் ஜதீஸ்வராவின் வேண்டுகோளின் பேரில் பிரான்ஸ்ஸில் வசிக்கும் மது என்பவர் சைக்கிளை அன்பளிப்பாக வழங்கினார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் வித்தகர் வி.ரி.சகாதேவராஜா கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் மகேந்திரகுமார் மேலும் உரையாற்றுகையில்,

இந்தக் கற்றல் ஊக்கிகள் நிச்சயமாக ஏனையோரையும் கல்வியின்பால் ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை. முதலில் வரலாற்றில் முதன்முறையாக யுஜிதா என்ற மாணவி சித்தியடைந்து சாதனைபடைத்தார்.

அதனைத்தொடர்ந்து வருடாந்தம் இந்தப் பாடசாலை புலமைப் பரிசில் சித்தி பெற்ற வண்ணமே உள்ளது.

இம்முறை டர்வின் சித்தி பெற்றுள்ளார். எனவே இதனை தொடர்ந்து நீங்கள்தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

மிகவும் பின்தங்கிய பிரதேசதிலுள்ள இந்தப் பாடசாலை புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரை எமது வலயத்தில் முதல் நிலையில் உள்ளது. அதிபர் கிருபைராஜா, ஏனைய ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாராட்டுக்குரியவர்கள்.-என்றார்.

### ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான

# ஆரோக்கியமான பாடசாலைக்கான விருது யாழ். இந்துக் கல்லூரிக்கு!







ஆசிய - பசுபிக் பிராந்தியத்துக்கான ஆரோக்கியமான பாடசாலைக்கான விருதை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுள்ளது.

ஆசிய - பசிபிக் பிராந்தியத்தில் பங்கேற்ற 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளில், Active Lifestyle பிரிவில் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி முதலிடத்தைப் பெற்றுள்ளது.

விருது வழங்கும் விழா கடந்த 3 ஆம் திகதி வியட்நாமின் டனாங்கில் உள்ள Pullman Beach Resort இல் நடைபெற்றது.


முன்னதாக, யாழ்ப்பாணம் இந்து கல்லூரி இலங்கையின் ஆரோக்கியமான பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு ஆசிய - பசிபிக் பிராந்திய போட்டியில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இலங்கைக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஜுன் மாதம் 24ஆம் திகதி Cinnamon Lakeside Hotelஇல் நடைபெற்றது.

இதன் மூலம் பாடசாலைக்கு 3.5 மில்லியன் ரூபா பரிசுத் தொகையாக கிடைக்கப்பெற்றது.

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு உரிய காணி அபகரிப்பால் அங்கு பதற்ற நிலை!






(எஸ்.கீதபொன்கலன்)

கன்னியாவில் உள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு உரிய காணியை சிலர் அடாத்தாக கைப்பற்றும் முயற்சியால் அங்கு குழப்ப நிலை உருவாகியுள்ளது.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கன்னியா வெண்ணீரூற்றுக்கு அருகில் காணப்படும் சுமார் 3 ஏக்கர் விஸ்தீரம் உடைய காணியை, சட்டவிரோத குடியேற்றவாசிகள் சிலர் சட்டவிரோதமாகக் கைப்பற்றி, கட்டடங்கள் அமைத்து வருவது தொடர்பில் குறித்த பகுதியில் தற்போது குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு அருகில் இருந்த காணி அதன் சட்டபூர்வ உரிமையாளர்களால் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த காணியை அந்தப் பகுதியைச் சாராத ஒரு சிலர் கைப்பற்றி உள்ளனர். அத்துடன் இந்தக் காணிகளில் சட்டவிரோதமாக, அவசர அவசரமாக கட்டடங்களையும் அமைக்கத் தொடங்கியுள்ளனர்.

இது தொடர்பில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை தடை உத்தரவையும் வழங்கியுள்ளது. மேலும் தமது சபையால் வழங்கப்பட்ட தடையை மீறி காணி அபகரிப்பு நடப்பதால் அதனை தடுத்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச சபை செயலாளர் உப்புவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும் தடையையும் மீறி தொடர்ந்தும் சட்டத்துக்கு முரணான வகையில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் காணியின் உரித்தாளர்களால் உரிய அரச தரப்புகளுக்கு அறிவித்தும் இதுவரை எந்த ஒரு சரியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று கன்னியா பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சட்டவிரோத கட்டட நிர்மாணங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# அக்கரைப்பற்று தவிசாளரின் வழிகாட்டலில் வீதி மற்றும் வடிகான்கள் துப்பரவுப் பணிகள்!

(றிஸ்வான் சாலிஹூ)

அக்கரைப்பற்று பிரதேச சபை ஒவ்வொரு வாரத்தின் வெள்ளிக்கிழமை தினங்களிலும் ஒரு வட்டாரம் தெரிவு செய்யப்பட்டு அதன் வீதிகளையும், வடிகான்களையும் சீர் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.றாசீக் தலைமையில் ஆரம்பித்து வைத்து நடைபெற்று வருகின்றது.

அந்தவகையில், பள்ளிக் குடியிருப்பு தெற்கு வட்டார அதாவுல்லாஹ் விளையாட்டு மைதான வீதி, வடக்கு வட்டார தப்லீக் வீதி மற்றும் வாய்க்கால் வீதி, தெற்கு வட்டார மத்திய வீதி ஆகிய வட்டார வீதிகளில் உள்ள வடிகான்கள் துப்பரவு செய்தும் பொதுப் போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கு இடைஞ்சல் செய்யும் மரங்களும் வெட்டி சீர் செய்யும் பணியும் இடம்பெற்றது.

இதில், பிரதேச சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். இந்தச் செயற்றிட்டத்துக்கு ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களும் பூரண ஆதரவு வழங்குவதாகவும் தவிசாளர் தெரிவித்தார்.

# எமது கடல் வளங்களைப் பாதுகாக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கர்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகை தராமல் பாதுகாக்க வேண்டியது அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சரினுடைய கடமை என்று நாங்கள் கருதுகிறோம்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல் எமது கடல் வளத்தைப் பாதுகாக்க இந்திய அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்டத் தலைவர் அன்ரனி சங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடபிராந்திய மீனவர்களின் பாரிய பிரச்சினையாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை காணப்படுகின்றன.

ராமேஸ்வரத்தில் இடம் பெற்ற கச்சதீவு மீட்பு போராட்டம் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சரால் கூறப்பட்ட விடயம் குறித்தும் அதற்கான தக்க பதிலடியைக் கடல் தொழில் அமைச்சர் வழங்கியுள்ளார். எமது கடல் தொழில் அமைச்சர் வழங்கிய பதிலடியை நாங்களும் கூற




விரும்புகின்றோம்.

இந்திய இழுவைப் படகுகள் இலங்கைக் கடல் பரப்பில் அத்து மீறி நுழைந்து எமது கடல் வளத்தை நாசப்படுத்துவதும், இராமேஸ்வர மீனவ சங்கங்களால் இலங்கைக்கு வந்து பேச்சு வார்த்தை மேற்கொள்ளச் சொல்வதும் கால அவகாசத்தை கோருவதாகவும் தொடராகக் காணப்படுகின்றது.

இந்திய மீனவர்கள் சட்ட விரோதமான தொழிலையே மேற்கொள்கின்றனர். இதனை முற்று முழுதாக நிறுத்த வேண்டும். கச்சை தீவை இலங்கைக்கு ஒப்பந்த மூலம் வழங்கும் போது அதற்கான பல்வேறு விடயங்களை இலங்கை விட்டுக் கொடுத்துள்ளது. எமது மீனவர்களின் பிரச்சினை வாழ்வாதாரத்துடன் தொடர்பு பட்டதாக காணப்படுகிறது.

இலங்கை வட பகுதி மீனவர்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இலங்கை எல்லைக்குள் இந்திய மீனவர்களின் படகுகள் வருகை தராமல் பாதுகாக்க வேண்டியது ஒரு நாட்டின் வெளிவிவகார அமைச்சரினுடைய கடமை என்பதை நாங்கள் கருதுகிறோம்.

எனவே இவற்றை கருத்தில் கொண்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையாமல், எமது கடல் வளத்தை பாதுகாக்க வேண்டும்.- என்றார்.

இதேவேளை, வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் குறித்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்புப் பகுதியில் அதிரடியாக களமிறங்கிய சுகாதாரப் பரிசோதகர்கள்!

## கைப்பற்றப்பட்ட வண்டு மொய்த்த உணவுப் பொருள்கள் அழிப்பு





(பா.சதீசன்)

தேவிபுரம் உடையார்கட்டு பகுதியில் சுகாதார பரிசோதகர்களால் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று (04) இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வள்ளிபுனம், தேவிபுரம், உடையார்கட்டு பகுதியில் கடைகள் மீது றொஜிஸ்ரன், பிரதாஸ், மற்றும் மேற்பார்வை சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை நடவடிக்கையுடன் டெங்கு ஒழிப்பு தொடர்பான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தச் சோதனை நடவடிக்கையில் வண்டு மொய்த்த பொருள்களும் மீட்கப்பட்டதோடு உரிமையாளர்களின் அனுமதியோடு அந்தப் பொருள்கள் அழிக்கப்பட்டன.

அத்துடன் டெங்கு தொடர்பான பொலித்தீன் பாவனைக்கு உட்பட்ட வர்த்தகர்கள் மீது வழக்கு தொடுக்கப் பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட உள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

# ஒட்டுசுட்டானில் சட்டவிரோத மணல் அகழ்வு செயற்பாடுகளுக்குப் பொலிஸாரே காரணம்!

## ரவிகரன் எம்.பி. குற்றச்சாட்டு



(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பிர தேசத்தில் அதிகரித்துள்ள சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகளுக்கு பொலிஸாரே காரணம் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றஞ்சாட்டி யுள்ளார்.

அத்தோடு விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்றதில்லை எனக் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப் பினர், விடுதலைப் புலிகள் முறையாக சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் அதிகரித்திருப்பதாகவும் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற முன்மொழி வொன்றை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அபிவிருத்திக் குழுவில் முன்வைத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் தொடர்ச்சி யாகப் பேசப்பட்டு வருகின்றது. இருப் பினும் சட்டவிரோத மணல் அகழ்வுச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மிக அதிகளவில் மேற்கொள்ளப்படு கின்றது.

இவ்வாறு இங்கு சட்டவிரோத செயற் பாடுகள் தலைவிரித்தாடுகின்ற போது, சட்டம் ஒழுங்கு முறையாக பேணப்படு வதாக பொலிஸாரோ, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய ஏனைய தரப்பினரோ போலிக் கருத்துக்களை இங்கு தெரிவித்துக் கொள்ளத் தேவை யில்லை.

தற்போது இந்த நாட்டில் ஆட்சிபீடத் திலுள்ள அரசும், அரசுத் தலைவரும் கூட இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும் என்று கூறுகின்றனர். நாமும் சட்டம் ஒழுங்கு முறையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்றே தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

ஆனால் இங்கு சட்டம் ஒழுங்கு சீரின்றியே காணப்படுகின்றது. சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொலிஸார் மீதே நாம் குற்றச்சாட்டு முன்வைக்க வேண்டியுள்ளது.

பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையாலேயே இவ்வா றான சட்டவிரோத மணல் அகழ்வுகள் உள்ளிட்ட, பல்வேறு சட்டவிரோத செயற் பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

ஆனால், விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறான மணல் அகழ்வு செயற்பாடுகள் மற்றும் கசிப்பு, கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப் பொருள்களோ எவையும் இருக்க வில்லை. விடுதலைப்புலிகள் முறை யாக சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தனர். அதனை யாரும் மறுக்கமுடியாது. – என்றார்.

# கிண்ணியா நகர சபையில் நிலவும் குறைபாடு தொடர்பாகக் கலந்தாய்வு





(ஏ.எச்.ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேரா சிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவுக்கும் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.மஹ்தி தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கிண்ணியா நகர சபையில் நிலவும் ஆளணிப் பற்றாக் குறை, நிதி பற்றாக்குறை, வருமா னத்தை ஈட்டுவதில் இருக்கும் இடை யூறுகள், மீன் சந்தைக் கட்டட நிர்மா ணம், கழிவு முகாமைத்துவ நிலையம் எதிர் நோக்குகின்ற சவால்கள், இடத் தட்டுப்பாடு, யானைவேலி அமைத்தல், சுற்றுலா துறையை மேம்படுத்தல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆளுநருடன் கலந்துரை யாடப்பட்டது.

இதனையடுத்து கிண்ணியா நகர சபை சார்பாக முன்வைக்கப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக் கைகளைத் தான் எடுப்பார் என்று ஆளுநரால் இணக்கமும் தெரிவிக் கப்பட்டது என்று நகர சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.



# கடலரிப்பு அபாயம் தொடர்பில் அரச அதிபர் நேரடி விஜயம்!

(பாறுக் ஷிஹான்)

கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் வேண்டுகோளுக்ககு அமைய அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம கல்முனை கடற்கரைப் பகுதியில் ஏற்படும் கடலரிப்பு அபாயம் உள்ள இடங்களை புதன் கிழமை (2) நேரடி விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டு உடனடி தீர்வு வழங்கினார்.



அரச அதிபருடன் கரையோர பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் கடற்கரை பாதுகாப்பு கல்லணை திட்ட கொந்தராத்துகாரர் உள்ளிட்ட தரப்பினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் நம்பிக்கையாளர் சபையினருடன் பிரதேச மீனவர்களும் இணைந்து கடலரிப்பு அபாயம் தொடர்பான கள நிலைமைகளை விளக்கினர்.

நிலைமையை ஆய்வு செய்த மாவட்ட அரச அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், கொந்தராத்துகாரருக்கும் இடைநிறுத்தப்பட்ட திட்ட வேலைகளை உடனடியாக ஆரம்பித்து இரண்டு வாரங்களுக்குள் முடிக்க உத்தரவுகள் வழங்கினார்.

இதன் பிரகாரம் கடலோர பாதுகாப்புக் கல்லணை திட்ட வேலைகள் ஆரம்பிக்க கொந்தராத்துகாரர் தரப்பில் உத்தரவு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# சர்வதேச 'ரோல் போல்' உலகக் கிண்ணம்; சாதித்த மன்னார் வீரர்கள் கௌரவிப்பு!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

2025 ஆண்டுக்கான உலக கிண்ண இளையவர் போட்டி மற்றும் பெரியோருக்கான ஆசியன் ரோல் போல் ( Roll ball. ) அணியில் மன்னார் மாவட்டம் சார்பாக இலங்கை அணிக்கு தெரிவாகி சர்வதேச ரீதியில் மூன்றாம் இடம்பெற்றுக் கொண்ட வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் நிகழ்வு ரோல் போல் சங்க மன்னார் கிளை தலைவர் விமலேஸ்வரன் தலைமையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிரதான பாலத்தடி இல் இருந்து வெற்றி ஈட்டிய வீர வீராங்கனைகள் மாலை அணிவிக்கப்பட்டு மன்னார் நகர மண்டபம் நோக்கி ஊர்வலமாக அழைத்துவரப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 27 வரை கென்யா நைரோபியில் இடம் பெற்ற ரோல் போல் உலக கிண்ண போட்டிக்கு தெரிவான இலங்கை அணியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மூன்று யுவதிகளும் 4 இளைஞர்களும் தெரிவாகி கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் போட்டியில் இலங்கை அணி மூன்றாவது இடத்தை பெற்ற நிலையில் குறித்த அணியில் விளையாடி திறமையை வெளிப்படுத்திய வீரர் வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார் நகரசபை தலைவர், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி அதிபர், சமூக சேவையாளர் அகஸ்ரி உட்பட ரோல் போல் வீரர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த உலக கிண்ண போட்டியில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வின்சன் டடிசன் அணித் தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# 3 அபாச்சி ஹெலிக்கொப்டர்களை இந்தியாவுக்கு வழங்கும் அமெரிக்கா

இந்திய இராணுவத்துக்காக அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடம் ஓர்டர் கொடுக்கப்பட்ட 6 ஹெலிக்கொப்டர்களில், முதல் 3 ஹெலிக்கொப்டர்கள் இம்மாதம் விநியோகிக்கப்பட உள்ளன.

அமெரிக்காவின் போயிங் நிறுவனம் அபாச்சி கன்ஷிப்ஸ் ரக ஹெலிக்கொப்டர்களை தயாரிக்கிறது. இதில் இயந்திர துப்பாக்கி, வானிலிருந்து தரை இலக்குகளை மற்றும் வான் இலக்குகளை தாக்கும் ஏவுகணைகள் மற்றும் ரொக்கெட் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். இது 'வானில் இயங்கும் டேங்க்' என அழைக்கப்படுகிறது.

இந்திய விமானப் படைக்கு 22 அபாச்சி ஹெலிகொப்டர்கள் 13,952 கோடி இந்திய ரூபாவுக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு வாங்கப்பட்டு படையில் சேர்க்கப்பட்டன. இதில் ஒன்று கடந்த தாண்டு லடாக்கில் தரையிறங்கும் போது பலத்த சேதம் அடைந்தது.



தரைப்படை பயன்பாட்டுக்காக 6 அபாச்சி ரக ஹெலிக்கொப்டர்கள் 5,691 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்க கடந்த 2020 ஆம் ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஹெலிக்கொப்டர்கள் விநியோகம் தாமதம் ஆகி வந்தது. இது தொடர்பாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் பீட் ஹெக்சேத்திடம், இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த செவ்வாய்கிழமை போனில் பேசினார். அப்போது முதல் 3 அபாச்சி ஹெலிக்கொப்டர்களை இம்மாதமும், அடுத்த 3 ஹெலிக்கொப்டர்கள் நவம்பர் மாதமும் விநியோகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் அபாச்சி ஹெலிக்கொப்டர் படைப்பிரிவு பாகிஸ்தான் எல்லையை அண்மித்துள்ள ஜோத்பூரில் அமைக்கப்படுகிறது.

ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பின்பு 12 கண்ணி வெடி போர்க்கப்பல்கள், 44,000 கோடி இந்திய ரூபா மதிப்பில் உள்நாட்டில் தயாரிக்கப்படவுள்ளன. டி.ஆர்.டி.ஓ. தயாரிக்கும் தரையிலிருந்து வான் இலக்குகளை தாக்கும் ஏவுகணைகள், இஸ்டார் என்ற கண்காணிப்பு விமானங்கள், கடற்படை பயன்பாட்டுக்காக உளவு பார்க்கும் சிறிய ரக நீர்மூழ்கிகள், போர்க்கப்பல்களில் பயன்படுத்தப்படும் 76 எம்.எம். துப்பாக்கிகள் என 1 லட்சம் கோடி இந்திய ரூபா மதிப்பிலான தளவாடங்கள் முப்படைகளுக்காக கொள்முதல் செய்யப்பட உள்ளன. இதற்கான ஒப்புதலை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சகம் வழங்கியுள்ளது.

# பாகிஸ்தான், சீனா, துருக்கியை ஒபரேஷன் சிந்தூரில் எதிர்த்தோம்

## இராணுவ துணைத் தளபதி ராகுல் ஆர். சிங் தகவல்




ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின்போது பாகிஸ்தான், சீனா, துருக்கி என 3 நாடுகளை எதிர்கொண்டோம் என்று இந்திய இராணுவ துணை தளபதி ராகுல் ஆர். சிங் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று நடந்த ஃபிக்கி நிகழ்ச்சியில் இந்திய இராணுவ துணை தளபதி ராகுல் ஆர். சிங், ஒபரேஷன் சிந்தூர் குறித்து உரையாற்றுகையில்,

"பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதற்கு பதிலடியாக பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத முகாம்களை அழிக்க முடிவு செய்யப்பட்டது. முதலில் 21 தீவிரவாத முகாம்கள் அடையாளம் காணப்பட்டன. கடைசி நேரத்தில் 9 முக்கிய தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டது. அந்த முகாம்கள் துல்லிய தாக்குதல்கள் மூலம் முழுமையாக அழிக்கப்பட்டன.

இதன்பிறகு இந்தியா, பாகிஸ்தான் இடையே 4 நாள்கள் போர் நடைபெற்றது. நமக்கு ஓர் எல்லை. ஆனால் நமது எல்லைப் பகுதிகளில் பாகிஸ்தான், சீனா, துருக்கி என 3 நாடுகளை எதிர்கொண்டோம். பாகிஸ்தான் முன்வரிசையில் இருந்தது. அந்த நாட்டுக்கு பின்னால் சீனா இருந்தது. பாகிஸ்தானுக்கு தேவையான அனைத்து இராணுவ உதவிகளையும் சீனா வாரி வழங்கியது.

கடந்த பல ஆண்டுகளாக பாகிஸ்தான் இராணுவத்துக்கு சீனா அதிநவீன ஆயுதங்களை விநியோகம் வருகிறது. தற்போது பாகிஸ்தான் பயன்படுத்தும் ஆயுதங்களில் 81 சதவீதம் சீன தயாரிப்பு ஆயுதங்கள் ஆகும். போரின் போது பாகிஸ்தான் இராணுவத்தின் மூலம் சீன ஆயுதங்கள் சோதித்து பார்க்கப்பட்டன. சுருக்கமாக சொல்வதென்றால், (சீனாவிடமிருந்து) கடன் வாங்கிய கத்தி மூலம் இந்தியா மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் முயற்சி செய்தது.

இந்தியா, பாகிஸ்தான் இராணுவத்தின் டி.ஜி.எம்.ஓ. அதிகாரிகள் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தி கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் இந்திய படைகள் எங்கெல்லாம் நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது என்பது குறித்த தகவல்களை பாகிஸ்தானுக்கு சீனா வழங்கி கொண்டிருந்தது. போரின்போது இந்தியா சார்ந்த உளவு தகவல்களை, பாகிஸ்தானுக்கு சீனாவே வழங்கியது.

மேலும், பாகிஸ்தான் இராணுவத்துக்கு நூற்றுக்கணக்கான ட்ரோன்களை துருக்கி வாரி வழங்கியது. இந்த ட்ரோன்கள் இந்தியாவுக்கு எதிரான வான்வழித் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டன. ஒரே நேரத்தில் பல முனை தாக்குதல்களை எதிர்கொண்டோம். ஆனால் எதிரிகளின் அனைத்து தாக்குதல்களையும் இந்தியாவின் முப்படைகளும் இணைந்து வெற்றிகரமாக முறியடித்தன.

ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கை, நமக்கு பல்வேறு படிப்பினைகளை கற்றுத் தந்திருக்கிறது. இந்திய வான் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க வேண்டும். குறிப்பாக ட்ரோன்கள், ஏவுகணைகளை நடுவானில் இடைமறித்து அழிக்கும் திறனை மேலும் அதிகரிக்க வேண்டும்." என்று தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் மீண்டும் 'நிபா' வைரஸ் தொற்று

இந்தியாவின் – கேரளா மாநிலத்தின் பல பகுதிகளில் மீண்டும் "நிபா" வைரஸ் தொற்று பரவத் தொடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பாலக்காடு, மலப்புரம் மற்றும் கோழிக்கோடு ஆகிய பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த வருடம் கேரளாவைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் "நிபா வைரஸ்" தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.

இதனையடுத்து, அங்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டதை அடுத்து வைரஸ் தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தநிலையில், நேற்று மீண்டும் மலப்புரம் மற்றும் பாலக்காடு ஆகிய பகுதிகளில் இரண்டு பேருக்கு குறித்த தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இதனையடுத்தே, குறித்த பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காசா உதவி மையங்களில் 613 பாலஸ்தீனர்கள் பலி

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆதரவு பெற்ற காசா மனிதாபிமான அறக்கட்டளை நடத்தும் உதவி மையங்களில் வைத்து, 613 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் 27ஆம் திகதி வரை இந்த கொலைகள் இடம்பெற்றுள்ளன.

எனினும் ஹமாஸ் அமைப்பை இலக்கு வைத்தே தாம் தாக்குதல் நடத்தி வருவதாக இஸ்ரேல் கூறுகிறது.

இதேவேளை, ஐந்து வாரங்களில் பாலஸ்தீனியர்களுக்கு 52 மில்லியனுக்கும் அதிகமான உணவுப் பொதிகளை வழங்கியுள்ளதாக இஸ்ரேல் ஆதரவு பெற்ற மனிதாபிமான அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

# ரஷ்யாவிற்கு எதிராக கடும் தடைகளை விதிக்குமாறு நெதர்லாந்து வலியுறுத்தல்

உக்ரைனில் தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை ரஷ்யா பரவலாகப் பயன்படுத்தியதற்கான ஆதாரங்களை நெதர்லாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் உளவுத்துறை அமைப்புகள் சேகரித்துள்ளன.

இதன்படி, மூச்சு திணறலை ஏற்படுத்தும் இரசாயனங்கள் உள்ளிட்டவற்றை ரஷ்யா பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



எனவே, ரஷ்யாவுக்கு எதிராக கடுமையான தடைகளை விதிக்குமாறு நெதர்லாந்து பாதுகாப்பு அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யா தமது இரசாயன ஆயுதங்களின் பாவனையை தீவிரப்படுத்துகிறது என்பதை தங்களால் உறுதிப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், ரஷ்யா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதை ஜேர்மனியின் உளவுத்துறை அமைப்பும் உறுதிப்படுத்தியுள்ளது.

## ஈரான் வான்வெளி திறப்பு:

# சர்வதேச விமானங்களின் போக்குவரத்து ஆரம்பம்

இருபது நாள்களுக்கு பிறகு ஈரானில் மீண்டும் சர்வதேச விமான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே சுமார் 12 நாள்கள் நடந்த மோதல் நீடித்த நிலையில், ஈரானின் மூன்று முக்கிய அணுசக்தி தளங்கள் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியது.

இதனை தொடர்ந்து ஈரானும் மற்றும் இஸ்ரேலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து இந்த மோதல் முடிவுக்கு வந்தது.

இதனையடுத்து, போர் பதற்றம் காரணமாக ஈரானில் சர்வதேச விமான போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், சுமார் இருபது நாட்களுக்கு பிறகு ஈரானில் மீண்டும் சர்வதேச விமான போக்குவரத்து தொடங்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து புறப்பட்ட விமானம் ஈரானில் நேற்று தரையிறங்கியதாக ஈரானின் விமான போக்குவரத்து துறை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் ஈரானின் விமான போக்குவரத்து துறையின் ஸ்திரத்தன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலுடனான சமீபத்திய போர் பதற்றங்களுக்கு பிறகு, இஸ்ரேல் தனது வான்வெளியை அமைதியாகவும் மற்றும் புத்திசாலித்தனமானகவும் நிர்வகித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

சனிக்கிழமை 05/07/2025

## கனடாவின் க்யூபெக் மாநிலத்தில் Skilled Worker Program ஆரம்பம்



C2 ▶



# கனடாவில் கல்வி கற்கும் வெளிநாட்டு மாணவர்கள் வங்கியில் வைத்திருக்க வேண்டிய தொகை அதிகரிப்பு

கனடாவில் கல்வி கற்க வரும் வெளிநாட்டு மாணவர்கள், தங்கள் சொந்தத் தேவைகளுக்காக தங்கள் வங்கிக்கணக்கில் வைத்திருக்க வேண்டிய தொகையை கனடா அரசு உயர்த்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கல்வி கற்க வரும் வெளிநாட்டு மாணவர்கள், தங்கள் சொந்தத் தேவைகளுக்காக கனடாவில் யாரையும் சார்ந்திருக்காமல், தங்களுக்கான தேவைகளை தாங்களே சந்திப்பதற்காக அவர்கள் தங்கள் வங்கிக்கணக்கில் ஒரு குறிப்பிட்ட தொகையை வைத்திருப்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும் என்றொரு விதி உண்டு.

அந்தத் தொகை 10,000 டொலர்களாக இருந்த நிலையில், 2024ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் அதை 20,635 டொலர்களாக உயர்த்தியது.

இந்நிலையில், அந்தத் தொகையை மீண்டும்

C2 ▶

# டொரண்டோவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழப்பு







டொரண்டோ நகரின் எடோபிகோ பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் யிரிழந்துள்ளார் என டொரண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோர்த் கீன் தெரு மற்றும் அட்டோமிக் அவென்யூ சந்திப்பு அருகில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் தீவிர காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் சமூக ஊடகத்தில் வெளியிட்ட செய்தியில் உறுதிப்படுத்தினர்.

இந்த விபத்தைத் தொடர்ந்து நோர்த் கீன் தெருவில், தி ஈஸ்ட் மால் முதல் ஷார்ன்க்ளிஃப் சாலை வரையிலான பகுதிகள் முழுமையாக மூடப்பட்டன.

# கனடாவின் பீல் பிராந்தியத்தில் போதை பொருள்கள் கடத்தல்

## ஒருவர் கைது



கனடாவின் பீல் பிராந்தியத்தில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட நபர் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பீல் பொலிஸார் சில மாதங்களாக முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் மேற்படி நபரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபருக்கு 21 வயது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2024 டிசம்பர் மாதத்தில் தொடங்கப்பட்ட இந்த விசாரணையின் ஒரு பகுதியாக, கடந்த மாதம் ஒன்டாரியோவில் உள்ள மில்க்ரோவ் பகுதியில் உள்ள ஒரு வீட்டில், தேடுதல் உத்தரவு அமல்படுத்தப்பட்டது.

இந்த தேடுதலின் போது இரண்டு ரிஸ்ட்ரிக்டட் வகை துப்பாக்கிகள், கோகெயின் மற்றும் ஒபியோயிட்கள் எனும் உயர் வகை போதைப்பொருள்கள், மேலும் மிகுதியான கனடிய டொலர்கள் மீட்கப்பட்டன என தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணையின் பின்னர், 21 வயதுடைய ஈதன் வில்லியம்ஸ்-கோவலிக் என்பவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

மேற்படி நபர் ப்ராம்ப்டனில் பிணை விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் பற்றிய தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# கனடா பெண்ணுக்கு கிடைத்த அதிர்ஸ்டம்

கனடாவின் மாண்ட்ரியலில் உள்ள செயின்ட்-லாரன்ட் பகுதியில் வசிக்கும் பெண் ஒருவருக்கு வாழ்நாள் முழுவதும் பணம் பெற்றுக்கொள்ளக் கூடிய அதிர்ஸ்டம் கிட்டியுள்ளது.

ப்ரெண்டா ஆபின்-வேகா என்ற இளம் பெண்ணுக்கு அதிர்ஸ்டம் கிடைக்கப் பெற்றுள்ளது.

சுமார் 20 வயதுடைய ஆபின்-வேகா தனது வேலை நிலையத்தின் வெளியே உட்கார்ந்தபோது, சீட்டுகளை சுரண்டி பார்த்தபோது மூன்று பிகிபேங்க் சின்னங்கள் தோன்றியதைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்துவிட்டதாக தெரிவித்துள்ளார்.

"என் கண்களில் நம்பிக்கையே வரவில்லை. அந்த சீட்டைக் குறைந்தது 10 தடவை பார்த்தேன்," என தெரிவித்தார்.

இதையடுத்து தனது தந்தையை உடனே அழைத்து மகிழ்ச்சியான செய்தியை பகிர்ந்துவிட்டார்.

அதிர்ச்சியால் அந்த நாள் முழுவதும் வேலைக்கு செல்லாமல் வீட்டில் ஓய்வெடுத்ததாகவும் கூறினார்.

வெற்றியாளருக்கு வாரமொன்றுக்கு ஆயிரம் டொலர்கள் என்ற அடிப்படையில் வாழ்நாள் முழுவதும் அல்லது ஒரே முறையில் 1,000,000 டொலர்கள் என தனது விருப்பின் அடிப்படையில் பணப் பரிசுத் தொகையை பெற்றுக்கொள்ள முடியும் என லோட்டோ-க்யூபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆபின்-வேகா வாரத்துக்கு 1,000 பெற்றுக்கொள்வதையே தேர்ந்தெடுத்துள்ளார்.

இந்த பரிசுப் பணத்தில் வீடு வாங்கவே விருப்பமுள்ளதாகவும் கூறியுள்ளார்.

**கனடாவில் கல்வி...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்த்தி தங்கள் வங்கிக்கணக்கில் 22,895 டொலர்கள் வைத்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை, கனடா புலம் பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு, ஜுன் மாதம் 2ஆம் திகதி வெளியிட்டுள்ளது.

எனவே, 2025 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 1ஆம் திகதி, அல்லது அதற்குப் பின் கனடாவில் கல்வி கற்க விண்ணப்பிக்கும் வெளிநாட்டு மாணவர்கள், இனி தங்கள் வங்கிக்கணக்கில் 22,895 டொலர்கள் வைத்திருக்கவேண்டும்.



# கனடாவின் க்யூபெக் மாநிலத்தில் Skilled Worker Program ஆரம்பம்

கனடாவின் க்யூபெக் மாநிலத்தின் திறமையாளர் தேர்வு திட்டம் (PSTQ), பல மாதங்களுக்கு பிறகு ஜுலை மாதம் மீண்டும் செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

இந்தத் திட்டம், முன்னதாக ஒக்டோபர் 2024-இல் நிறுத்தப்பட்ட Regular Skilled Worker Program (PRTQ)-ஐ மாற்றி, நவம்பர் 29, 2024-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், அறிமுகம் செய்தவுடன் அது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது, Quebec அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு மூலம், புதிய தேர்வு அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு முறைமையுடனீ ளுவஞ மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.

இந்த திட்டம் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது:

அதிக தகுதி வாய்ந்த மற்றும் நிபுணத்துவம் (qualified and specialized skills)

இடைநிலை மற்றும் கைத்திறன் வேலைகள் (intermediate and manual skills)

ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட தொழில்கள் (regulated professions)

தனித்திறமை உள்ளவர்கள் (exceptional talent)

தேர்வுக்கான முக்கியக் காரணிகள்:

கல்வித் தகுதி

பயிற்சி

வேலை அனுபவம்

க்யூபெக் மாநிலத்தில் கல்வி பெற்றல் அல்லது வேலை செய்த அனுபவம்

பிரஞ்சு மொழிப் புலமை (முக்கியமாக முதல் மூன்று பிரிவுகளுக்குத் தேவையானவை)

திய தேர்வு முறைப்படி, விண்ணப்பதாரர்கள் யுசசைஅய இணைய தளத்தில் தங்கள் Declaration of Interest (DOI) சமர்ப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே DOI சமர்ப்பித்தவர்கள், நவம்பர் 29, 2024-க்கு பிந்தைய புதிய அளவீடுகளை பயன்படுத்தி தங்கள் சுயவிவரங்களை புதுப்பிக்க வேண்டியிருக்கிறது.

முதற்கட்டமாக ஜுலை மாதத்தில், க்யூபெக் மாநிலத்தில் வாழும், பிரஞ்சு மொழியில் தேர்ச்சி பெற்ற மற்றும் வேலைவாய்ப்பு தேவை உள்ள துறைகளில் பணியாற்றும் நபர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

# 5 மில்லியன் கனேடிய டொலர்கள் பரிசு; நீதிமன்றம் சென்றுள்ளனர் காதலர்கள்




கனடாவில், லொட்டரியில் விழுந்த பரிசு காரணமாக ஒரு ஜோடி நீதிமன்றம் சென்றுள்ளது.

கனடாவின் மனித்தோபாவைச் சேர்ந்த கிறிஸ்டல் மெக்கே என்னும் பெண்ணுக்கு, 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம், லொட்டயில் 5 மில்லியன் கனேடிய டொலர்கள் பரிசு விழுந்துள்ளது.

இலங்கை மதிப்பில் அது சுமார் 110 கோடி ரூபாய் ஆகும்.

இந்நிலையில், கிறிஸ்டலின் முன்னாள் காதலரான லாரன்ஸ் கேம்பல், அது தான் வாங்கிய லொட்டரிச்சீட்டு என்றும், அந்த பரிசுத்தொகை முழுவதும் தனக்குத்தான் சொந்தம் என்றும் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அந்த லொட்டரிச்சீட்டில் பரிசு விழுந்தபோது, தனக்கு நிரந்தர அடையாள அட்டையோ வங்கிக்கணக்கோ இல்லாததால், அந்த பரிசை தனக்காக பெற்றுக்கொள்ளுமாறு தான் கிறிஸ்டலைக் கேட்டுக்கொண்டதாக லாரன்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால், தானும் லாரன்சும் சேர்ந்து காரில் பயணிக்கும்போது, காரை நிறுத்தச் சொல்லி, தான் அந்த லொட்டரிச்சீட்டை வாங்கியதாக தெரிவித்துள்ள கிறிஸ்டல், பரிசு விழுந்தபோது கூட, அதை தான் கையெழுத்திட்டு வாங்கிக்கொள்ளும்போது லாரன்ஸ் பரிசுத்தொகை குறித்து எந்த விவாதமும் முன்வைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

பரிசு விழுந்தபின் கிறிஸ்டல் தன் மொபைல் அழைப்புகளை ஏற்கவில்லை என்று லாரன்ஸ் கூற, கிறிஸ்டலோ, பரிசு விழும் முன்பே, அதாவது, 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே, தான் லாரன்சை பிரிய விரும்புவதாக அவரிடம் கூறியதாக தெரிவித்துள்ளார்.